# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.PC)
(கு.ந.வி. தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I

CCTNS D4 0537

1. District COIMBATORE CITY PS KUNIAMUTHUR Year 2020 FIR No. 564 Date 08-05-2020
மாவட்டம் காவல் நிலையம் ஆண்டு மு.த.அ. எண் நாள்

2. Act(s) Sections
சட்டம் பிரிவுகள்
INDIAN PENAL CODE, 1860 124A
INDIAN PENAL CODE, 1860 153A(1)(a)

3. (a) Occurrence of Offence Day SATURDAY Date From: 22-02-2020 Date To:
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை
Time Period: On Time from: 13.40Hrs Time To:
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information received at PS Date: 08-05-2020 Time 10.00Hrs (c) General Diary Reference: Entry No(
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம் பொது நாட்குறிப்பு பதிவு விவரம் எண்
Time
நேரம்

4. Type of Information: SPECIAL REPORT
தகவலின் வகை

5. Place of Occurrence: (a) Direction and Distance from PS NORTH & 4.0 Km Beat Number: BEAT 4
குற்ற நிகழ்விடம் (அ) காவல் நிலையத்திலிருந்து செல்லும் தூரமும், திசையும் ரோந்து காவல் எண்
(b) Address: ஆத்துப்பாலம் ஜோதின் பாக் மைதானத்தில்
முகவரி
(c) In case, outside limit of this Police Station then the Name of P.S: District
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின் அந்நிலையின், அந்த கா.நி. பெயர் மாவட்டம்

6. Complainant/Informant (a) Name: SILAMBARASAN (c) Date/Year of Birth: (d) Nationality INDIA
குற்றமுறையீட்டாளர் / தகவல் தருபவர் பெயர் நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம்
(b) Father's/Husband's Name
தந்தை / கணவர் பெயர்
(e) Passport No. Date of Issue Place of Issue
வெளிநாடு நுழைவுச்சீட்டு எண் வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்
(f) Occupation: POLICE OFFICER
தொழில்
(g) Address SI D4 KUNIYAMUTHUR PS COVAI CITY
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றம் சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்

SEEMAN, NAAM TAMILAR KATCHI CHIEF ORGANISER

8. Reasons for delay in reporting by the complainant/informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவர் முறையீட்டில் தகவல் கொடுப்பதில் காலதாமதம்
ஏற்பட்டதற்கான காரணம்

9. Particulars of the properties stolen/involved
களவு போன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம்

10. Total value of properties stolen/involved
களவு போன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு
11. Inquest Report/ Un-natural death Case No. If any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

Scanned with CamScanner

**12. FIR Contents :**

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம்

கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 7 கோவை அவர்கள் முன்பாக சமர்ப்பிக்கப்படுகிறது. கடந்த 22.02.2020ம் தேதி 21.30மணியளவில் நான் (கணேஷ்குமார் உதவி ஆய்வாளர் டி4 குனியமுத்தூர் காவல் நிலையம்) நிலைய பொறுப்பு அலுவலில் இருந்த போது நிலைய உதவி ஆய்வாளர் திரு. சிலம்பரசன் அவர்களால் கொடுத்த தனி அறிக்கை பின் கண்டவாறு உயர்திரு கோவை மாநகர் டி 4 குனியமுத்தூர் காவல் நிலைய ஆய்வாளர் அவர்களுக்கு கோவை மாநகர் டி4 குனியமுத்தூர் காவல் நிலைய உதவி ஆய்வாளர் சிலம்பரசன் ஆகிய நான் எழுதிக் கொடுக்கும் தனி அறிக்கை. ஐயா, கடந்த 22.02.2020 ம் தேதி பகல் 12.00 மணி முதல் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு. முருகானந்தம் த.கா 1614 விஜயக்குமார் த.கா 1767 ராஜாமுகமது மற்றும் காவல் பார்ட்டிகள் சகிதம் கோவை குனியமுத்தூர் ஆத்துப்பாலம் ஷாகின்பாக் மைதானத்தில் அனைத்து இஸ்லாமிய ஜமாஅத் இஸ்லாமிய அமைப்புகள் மற்றும் அரசியல் கட்சிகள் சார்பாக மத்திய அரசின் குடியுரிமை சட்டத்தை எதிர்த்து தொடர் முழக்கப் போராட்டத்தின் தொடர்ச்சியாக பாதுகாப்பு அலுவலில் இருந்த போது மேற்படி ஷாகின்பாக் மைதானத்தில் ஒலி ஒளி வசதியுடன் அமைக்கப்பட்டிருந்த திடலில் சுமார் 1500 பெண்கள் உட்பட சுமார் 3500 பேர்கள் குழுமியிருக்க பலர் பேசினார்கள். தொடர்ந்து 13.40 மணியளவில் கூட்டத்திற்கு வந்திருந்த நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் அவர்கள் 14.30 மணி வரை பேசினார். மேற்படி பேச்சில் திரு. சீமான் அவர்கள் தனது பேச்சின் போது நாடெங்கிலும் குடியுரிமை சட்டத் திருத்தத்திற்கு எதிரான போராட்டங்கள் பெயரளவில் நடந்து கொண்டிருப்பதை நாம் பார்த்துக் கொண்டு வருகிறோம். விடுதலை பெற்ற எழுபத்திரண்டு கால இந்தியாவில் எத்தனையோ அரசுகள் எழுந்திருக்கிறது. வீழ்ந்திருக்கிறது. மாறியிருக்கிறது. ஆனால் இந்த எழுபத்திரண்டு ஆண்டுகளாக யார் இந்தியர் என்று தெரியாமல் தான் எங்களை எல்லாம் ஆட்சி செய்து கொண்டு இருந்தீர்களா என்ற கேள்வி எழுகிறது. தொடர்ந்து பேசியவர் நாட்டின் முதல் குடிமகன் அய்யா ராம்நாத் கோவிந்த், நாட்டின் வலிமை மிக்க அமைச்சர் உள்துறை அமைச்சர் அய்யா அமித்ஷா போன்றவர்கள் எல்லாம் உங்களின் குடியுரிமை சான்றிதழை காட்டுங்கள் அதைப் பார்த்து விட்டு நாங்களும் அதற்கான குடியுரிமை சான்றிதழை காட்டுகிறோம் என்றும் இப்ப பாருங்க நாம் எல்லா வேலையையும் விட்டுட்டு ஒரு பதற்றமா இங்க பேசிக்கிட்டு இருக்கோம்ல, இது அவர்களுக்கு அவசியப்படுது. இந்தியன் ஏர்லைன்ஸ் ஏலத்துக்கு வந்தது, யாரும் பேசலை LIC விற்பனைக்கு வந்ததைப் பற்றி யாரும் பேசலை, ஏன்ன அதைப் பேச மாட்டோம். இந்த குடியுரிமை சான்றிதழ் இருக்குல்ல இதையே வச்சு ஒரு வருஷம் ஓட்டிடலாம்னு முடிவு எடுத்திட்டாங்க. மாண்பு மிகு அமைச்சர் பெருமக்கள் அம்மையார் நிர்மலா சீதாராமன் 4150 கோடி ஒதுக்கி இருக்கிறார். எதற்கு தெரியுமா தூய காற்றிறகு, இந்த தூய காற்றை எப்படி வர வைப்பீர்கள் எங்கிருந்து வர வைப்பீர்கள் என்ற கேள்வியை எவரும் எழுப்பலே ஏன் குடியுரிமை சட்டத்துக்கு பக்கம் எல்லாம் அமுங்கி போச்சு.



Scanned with CamScanner

பார் பாதிப்படைந்து இருக்கிறார்கள். தமிழ்நாட்டில் ஒருவரை காட்டுங்கள் ஒரு கோடி தருகிறேன்
ஒருத்தன் சுவரொட்டி அடிச்சு ஒட்டியிருக்கிறான் அதுக்கு பல ஆயிரம் செலவழிச்சு, அட பைத்தியக்காரா
நீதான்டா குடியுரிமை அற்றவன், நீதான்டா பாதிக்கப்பட போற நீ தெருக்கோடியில திரிவே, குடியுரிமை
அற்றவனா, பார்த்துட்டே இரு, இது இஸ்லாமிய குடி மக்களுக்கு எதிரானது என்று எண்ணுவதே
தவறானது, ஒட்டு மொத்த தேசத்தின் குடிமக்களுக்கு எதிரானது என்றும் ஹிட்லர் சொல்லிக்
கொடுக்கிறான்ல மக்களை எப்போதும் பரபரப்பாக வைத்துக் கொள், நம்மைப் பற்றியோ, நம்
ஆட்சியைப் பற்றியோ சிந்திக்க விடாமல் வைத்துக் கொள் அதை அவர்கள் கவனமாக செய்கிறார்கள்.
நாம் குடியுரிமை சட்டத் திருத்தத்தை எதிர்த்து போராட வேண்டிய அவசியம் நமக்கில்லை நாட்டின்
முதன்மை அமைச்சர் மோடி அவர்கள் குடியுரிமை சான்றிதழை காட்ட வேண்டும் அமித்ஷா அவர்கள்
காட்ட வேண்டும் பாரதிய ஜனதா கட்சியினுடைய அமைச்சர்கள் அனைவரும் காட்ட வேண்டும்,
பாரதிய ஜனதா கட்சியினுடைய பாராளுமன்ற உறுப்பினர்கள் அனைவரும் காட்ட வேண்டும் என்று
தான் இனி நாம் போராட வேண்டுமே ஒழிய, போராட்ட வடிவத்தை மாற்றுங்கள், காட்டுங்கள்
நாங்களும் காட்டுகிறோம், என்றும் இன்றைக்கு குடியுரிமை அற்றவன் என்று முகாமில் அடைக்கிற நீ
ஒரு நாள் மக்களின் புரட்சியின் மூலமாக அதிகாரம் புரட்டி வீசப்படும், புரட்டி எறியப்படும்,
அன்னைக்கு என்ன பண்ணுவ ஒன்னு நீயும் என்னோட முகாம்ல இருக்கனும், இல்ல திகாருக்குள்ள
போகனும், ரெண்டுல ஒன்னு கட்டாயம் நடக்கும் என்றும் "மாநில தன்னாட்சி பெற்ற தனித்த நாடு
காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதியா, இல்லை எல்லாருக்கும் தெரியும். காஷ்மீர் தனி நாடு.
பாகிஸ்தானோடு போவதா, சீனாவோடு போவதா, இந்தியாவோடு போவதா என்கிற போது பெரிய
நாடு இந்தியா பக்கத்துல இருக்கு அதனோடு போய் இருப்போம் என்று முடிவெடுத்து மக்கள்
வந்தார்கள். 99 ஆண்டுகள் ஒப்பந்தம் தன்னாட்சிக்கு போராடிக் கொண்டிருக்கிறோம் நாம். ஆனால்
தன்னாட்சி பெற்ற ஒரு மாநிலமாக இருந்தது இந்தியாவில் காஷ்மீர், அந்த காஷ்மீரை ரெண்டா உடைச்சு
370 சட்டப் பிரிவை நீக்கி சிறப்பு அந்தஸ்தை ரத்து செய்து மாநில உரிமை பெற்ற ஒரு நாட்டை
யூனியன் பிரதேசமாக ஒன்றிய பிரதேசமாக மாற்றிய செயல் எவ்வளவு பெரிய கொடுமை என்பதை
அறிவிற் சிறந்த மக்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் பாபர் மசூதி இடிப்பு வழக்கு பல
ஆண்டுகள் நடந்து தீர்ப்பு வந்தது. நீதி வரலை தீர்ப்பு வந்தது. அந்த தீர்ப்போ ஆர்.எஸ்.எஸ். தலைவரின்
அறிக்கையும் திராவிட முன்னேற்ற கழக தலைவரின் அறிக்கையும் ஒன்று தான். படிச்சு வேணா
பாருங்க, போட்டு பாருங்க, வேணும்னா எடுத்துக் காட்டுவேன், என்ன சொன்னார்கள். இந்த தீர்ப்பை
ஏற்கவில்லை என்றால் இரத்த ஆறு ஓடட்டும் நீதியை சொல்லுங்க சத்தியத்தை பேசுங்கள், நாங்கள் சாகத்
தயாராக இருக்கிறோம். யார் பேசுவா? உங்கள் மகன் நான் பேசுவேன் என் குரல்வளை இவ்வளவுதான்
உயரம், ஏறனும் உயரத்தில் இருக்குறவன் பேசல எப்படி தீர்ப்பு வந்தாலும் அதை அப்படியே ஏற்றுக்
கொள்ளுங்கள் அது எப்படி தீர்ப்பு வரும்னு உனக்கு எப்படித் தெரியும்? அது என்ன அப்படியே ஏற்றுக்
கொள்றது? ஆல மரத்தடி பஞ்சாயத்தை விட அயோக்கியமானது பாபர்மசூதிக்கான தீர்ப்பு . ஒரு



Scanned with CamScanner

தலைவன் இந்திய நாட்டில் கேட்டதுண்டா? என்றும் காஷ்மீர் முழுக்க முழுக்க ராணுவ பாதுகாக்கப்ப ஒரு மாநிலமாக இருக்கு ஒரு கிலோ மீட்டருக்குஒரு சோதனை சாவடி இருக்கே சோதிச்சீங்களா இல்லையா? அதிகமாக பாதுகாக்கப்பட்ட பகுதிக்குள் 25 கிலோ மீட்டர் ஒரு வண்டி ஓடி வருதே அது எப்படி வந்துச்சு? அதை நீங்க எப்படி அனுமதிச்சீங்க? அதெல்லாம் எதுக்காக? திட்டமிட்டு இவர்கள் நம ராணுவ பிள்ளைகளை பலியிட்டார்கள் தேர்தல் வெற்றிக்காக அதுதானே நடந்தது? இவர்கள் அதிகாரத்திற்கு வர வேண்டும் என்றால் எதை வேண்டுமானாலும் செய்வார்கள். இப்போது பாகிஸ்தான் பங்களாதேஷ் ஆப்கானிஸ்தான் இந்த நாடுகளில் இருந்து இந்துக்கள் வந்தால் ஏற்போம், இந்து என்று யார், பார்சி வந்தால் ஏற்போம் பௌத்தர் வந்தால் ஏற்போம், சீக்கியர் வந்தால் ஏற்போம் இவர் எல்லாம் சேர்த்துதாம்பா இந்து. இந்துன்னு தனியா ஒருத்தருமே இங்கே கிடையாது. பௌத்தன் சமணன் சைவன் வைனவன் சீக்கியன் தனித் தனி மதங்கள். அதுவும் வெள்ளைக்காரன் போட்ட சட்டம் அது எல்லாரையும் அனுமதிப்போம். இஸ்லாமியர்களை அனுமதிக்க முடியாது என்று சொல்வது தான் பிரச்சனை ஆகும், என்றும் இஸ்லாமியர்களுக்கு கொள்ளையா எல்லா பயல்களுக்கும் சேர்த்து, அவ நீங்க புரிந்து கொள்ளனும் இந்துக்களுக்கு மட்டும் இதுல குடியுரிமை சான்றிதழ் கிடைத்திடும் இஸ்லாமியர்களுக்கு கிடைக்காது. அப்படியெல்லாம் ஒன்னும் கிடையாது எங்க ஊர் இளையான்கு கீழக்கரை பக்கமுள்ள இருக்குறவன் எல்லாம் பாபர் விட்டுட்டு போன பேரன் பேத்தி இல்லையா எ சொந்தக்காரன் என் மாமன் மச்சினன்தான் இஸ்லாத்தை ஏற்றிருக்கிறான். நீ எதோ வேத்து கிரகத்தி இருந்து வந்தவன், நான் இங்கேயே பிறந்து வளர்ந்தவன் அறிவில் சிறந்த ஆட்சியாளர்கள் புரிந் கொள்ளனும் இஸ்லாமியர்கள் நாங்கள் தமிழர்கள் அல்ல தமிழர்கள் நாங்கள் இஸ்லாத்தை நாங்க ஏற்றிருக்கிறோம் புரிதா நாங்க பாபரினுடைய வாரிசுகள் இல்லை என்றும் இந்தக் கூட்டத்திலிருந்து நா ஒரு தீர்மானம் எடுத்துக்குவோம் முடிவு எடுத்துக்குவோம் கொள்கை முடிவு குடியுரிமை சட்டத்தை கேட்டா கொடுப்பதில்லை, அவ்வளவு தான், முடிவு செய், என்றும் இந்த திட்டத்தை நாம எதிர்க்கனு ஏனென்றால் அநீதி என்று தெரிகிறது. அநீதியை கண்டு அச்சம் கொள்ளாமல் எதிர்த்து போராடுகிறவ எவனோ அவனே உண்மையான ஜிகாத் என்று நபிகள் நாயகம் சல்லாது சொல்லியிருக்கிறார். அநீ என்று தெரிந்த பிறகு அதை அச்சம் இல்லாது எதிர்க்கனும் அது இஸ்லாமிய மக்களுக்கு என்று இல்லை தேசத்தின் ஒட்டு மொத்த குடிகளுக்கும் ஆபத்தானது என்று தெரிந்ததால் இதை எதிர்த் போராடுகிறோம் எனவே இந்த போராட்ட களத்தில் இருக்கிற ஒவ்வொரு உறவினர்களையும் உட பிறந்தார்களையும் பேரன்பு மிக்க என் பெற்றோர்களையும் என் தம்பி தங்கைகளையும் நபிகள் நாயக சல்லல்லா அலைக்கும் சல்லல்லாம் சொன்னது போல உண்மையான ஜிகாத்துகளாக புனித போராளிகளாக நான் பார்க்கிறேன் இந்த போராட்டம் வெல்லும் நம் கோரிக்கைகள் நிறைவேறும் வ கோடி கைகள் இணைந்து நாம் போராடுவோம் புரட்சி எப்போதும் வெல்லும் என்று பேசியுள்ளா எனவே மேற்படி நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் திரு. சீமான் அவர் கூடியிருந்த இஸ்லாமிய மக்களிடையே இந்திய ஜனாதிபதி பிரதமர் உள் துறை அமைச்சர் ஆகியோர்



Scanned with CamScanner

மீதும் இந்திய அரசின் மீதும் வெறுப்புணர்வு ஏற்படுத்தி பகையுணர்ச்சியை தூண்டும் வகையில் பேசியும் இரு வேறு மத மக்களிடையே விரோத உணர்ச்சிகளை தூண்டும் விதமாகவும் கலகம் ஏற்படு விதமாக பேசியும் மத்திய அரசுக்கு எதிராகவும் பொது அமைதியை குலைக்கும் விதமாகவு பேசியுள்ளார் என்பதால் அவர் மீது நடவடிக்கை எடுக்க இந்த தனி அறிக்கையை சமர்பிக்கிறேன். (sc Silambarasan, SI D4 L&o PS 22.02..2020 மேற்படி தனி அறிக்கையைப் பெற்று பொது நா குறிப்பில் பதிவு செய்து அதிகாரிகளின் அறிவுரை பெற்று கோவை மாநகர காவல் ஆணையாள அலுவலக முதுநிலை அறிக்கையாளர் அவர்களிடம் திரு. சீமான் பேசிய மேற்படி பேச்சின் எழுத்த வடிவ பகர்ப்பு பெற நடவடிக்கை எடுத்தும் அவரால் வழங்கப்பட்ட எழுத்து வடிவிலான பகர்ப்பு பெற்ற சட்ட ஆலோசகரிடம் கருத்துரு பெற்று இன்று 08.05.2020 ம் தேதி 10.00 மணியளவில் மேற்படி தன அறிக்கையின் சாராம்சப்படி D4 குனியமுத்தூர் காவல் நிலைய குற்ற எண். 864/2020 U/S. 124(A) 153(A)(1)(a)IPC படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. (sd) V. Ganeskumar SSI D4 Ps 08.05.202( இதன் அசலை வாதியின் தனி அறிக்கை மற்றும் சுருக்கெழுத்தர் அறிக்கையுடன் இணைத்து கோவை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் VII அவர்களுக்கும் மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது. அரசால் வழங்கப்பட்ட முதல் தகவல் அறிக்கை தாள் தீர்ந்துவிட்டதால் காவல்துறை கூடுதல் இயக்குனர் மாநில குற்ற ஆவண காப்பகம் அவர்களின் R.C.NO: D.X / 3833 / SCRB /2014-8 நாள் 03.04.2020 மற்றும் கோவை மாநகர காவல் ஆணையர் அவர்களின் RC.NO: E2/ 23159 / 2019 Dt: 08.04.2020 உத்தரவின்படி இந்த முதல் தகவல் அறிக்கைக்கு **CBEC D4 437** என்ற வரிசை எண் கொடுக்கப்பட்டுள்ளது.

13. Action Taken: Since the above report reveals Commission of Offence(s) u/s as mentioned in item No.2, registere case and Directed SAKTHIVEL M , INSPECTOR OF POLICE to took up the investigation.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2 -ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து SAKTHIVEL M , INSPECTOR OF POLICE பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது

FIR read over to the Complainant/Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant/Informant free of cost.

மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது



Scanned with CamScanner

14. Signature / Thumb Impression of the Complainant Informant
[illegible]

15. Date & Time of despatch to the court: 08-03-2020
[illegible]

Signature of the Officer in-charge, Police Station
[illegible]

Name : GANESH KUMAR V
[illegible]

Rank : SUB INSPECTOR OF POLICE    No. :
[illegible]

Scanned with CamScanner